பாராளுமன்ற தொடர் இலக்கம் 290

நிறுவனத்தின் பெயர் : நிருவாக மேன்முறையீட்டு நியாய அதிகாரசபை

அரச கணக்கு செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைப்பாடுகள்	குறித்த குறைப்பாடுகளை சரிசெய்தவற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்கால நிலைமை
முதலாவது பகுதி 72:00	
I. வருடாந்த நிதிக் கூற்றுகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படாமை II. அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படாமை	அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில், கணக்குகளை உரிய தேதியில் சமர்ப்பிக்கவும், 2022 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் அரசாங்கத்தின் முற்பணக் கணக்கை உரிய தேதிக்கு முன்னதாக கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
III. உள்ளக கணக்காய்வு ஐயப்பாடுகளின் பதிவேடு இற்றைப்படுத்தப்படவில்லை.	உள்ளக கணக்காய்வு அலுவலர் ஒருவரை நியமிக்கப்படாததால், உள்ளக கணக்காய்வு மேற்கொள்வதில்லை என்பதுடன், அதன் காரணமாக உள்ளக கணக்காய்வு ஐயப்பாட்டு பதிவேடும் பராமரிக்கப்படவில்லை.
IV. நுகர்வோர் பொருட்களின் பதிவேடு இற்றைப்படுத்தப்படாமை.	அவதானிப்புடன் இணங்கப்படவில்லை. எழுதுகருவி பொருட்களின் புத்தகம் இற்றைப்படுத்தி பராமரிக்கப்பட்டுள்ளது.

V.	2004.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றுநிருபம் பிரகாரம் மென்பொருளுக்கு ஏற்புடையதாக முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச்சொற்களை மூன்று மாதங்களுக்கொரு முறை மாற்றம் செய்யப்படாமை	2021 வருடத்தில், இந்த அதிகாரசபையில் கணக்காளர் ஒருவரை பதில்கடமையாற்றும் அடிப்படையிலேனும் நியமிக்கப்படவில்லை. ஆனால் இரண்டு எழுதுநர்களைக் கொண்டு குறித்த பணிகளை மேற்கொண்டதுடன், கடவுச்சொல்லை அவ்வப்போது மாற்றம் செய்யப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் கணக்காளர் ஒருவரை பதில் கடமையாற்றும் அடிப்படையில் நியமனம் செய்த பின்னர் சுற்றுநிருபத்தின் ஆலோசனைகளுக்கமைவாக மூன்று மாதங்களுக்கொரு முறை , கடவுச்சொல் மாற்றப்பட்டுள்ளது.
VI.	வருடாந்த செயல்திட்டம் தயாரிக்கப்படாமை	2021 ஆம் ஆண்டில், நாட்டில் காணப்பட்ட கோவிட் -19 தொற்று நோய் பரவல் காரணமாக அலுவலகப் பணிகள் பாதிக்கப்பட்டதால் வருடாந்திர செயற் திட்டத்தைத் தயாரிக்க முடியவில்லை. எனினும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதிகாரசபையின் வழங்கல் பணிக்காக அவ்வப்போது மிகக் குறைந்த அளவிலான

VII.	வருடாந்த பெறுகை திட்டம் தயாரிக்கப்படாமை.	எழுதுபொருட்களின் பொருட்டு மட்டும் கொள்முதல் செய்யப்படுகிறது. அதனையும் □ரீ லங்கா ஸ்டேட் டிரேடிங் கோபரேஷன் நிறுவனத்திடமிருந்து கௌவனவு செய்யப்படுகிறது. ஆகையால் பெறுகை திட்டம் தயாரித்தல் நடைமுறைக்கு பயனற்றதாக காணப்படுவதுடன், 2024 ஆம் ஆண்டுக்காக எழுது கருவி பொருட்களின் பொருட்டு ரூபா. 800,000/- மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
VIII.	எல்லா வாகனங்களிலும் அரச இலட்சினைகளை பொறிக்கப்படாமை	அதிகாரசபைக்குரியதாக இரண்டு வாகனங்கள் மட்டும் உள்ளதுடன், அதில் ஒன்று தலைவர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மற்றைய வாகனம் பொருட்டு அரச இலட்சினை பொறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
IX.	2016/30 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களில் எரிபொருள் செலவழிப்பு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை.	அவதானிப்புடன் இணங்குகின்றேன். 2024 ஆண்டில் எரிபொருள் செலவழிப்பு தொடர்பாக பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

X.	நி.ஒ.விதி. 04 (1) பிரகாரம் செலவு விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுளை பயன்படுத்திய பின்னர் ஆண்டு இறுதியில் எஞ்சிய ஒதுக்கீட்டு எல்லைகளைக்கொண்டு பொறுப்புகளை மேற்கொள்ளுதல்.	அவதானிப்புடன் இணங்கவில்லை. அவ்வாறு பொறுப்புகளை மேற்கொள்ளப்படவில்லை.
XI.	உரிய காலப்பகுதிக்கு புறம்பாக ஒதுக்கீடுகளை வேறு நிறுவனங்களிடம் ஒதுக்கப்படுதல்.	அவதானிப்புகள் இந்த நிறுவனத்திற்கு ஏற்புடையதற்றதாகும்.
XII.	2019.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம் பதவியணியின் தகவல்கள் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்படாமை	அவதானிப்புகளுடன் இணங்கவில்லை. ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் உரிய தகவல்கள் அனுப்பி வைக்கப்டப்டுள்ளது.
XIII.	நி.ஒ.விதி. 134 (2) பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியை உசாவி உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தை ஆண்டு ஆரம்பத்தில் தயாரிக்கப்படாமை.	உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இல்லாமையால் இவ்வகையில் பணியாற்றுவதற்கு ஆற்றல் இல்லாமை.
XIV.	ஆகக் குறைந்தது 2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களாவது நடாத்தப்படாமை.	அவதானிப்புகள் இந்த நிறுவனத்திற்கு ஏற்புடையதற்றதாகும். .

பகுதி இரண்டு 30:00

I.	நிறுவனம் பற்றிய தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படவில்லை.	இணையத்தளம் ஒன்றை தயாரிப்பதற்கான ஆரம்பகட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், திறைசேரியில் இருந்து பணம் ஒதுக்கப்படவில்லை. 2024 ஆம் ஆண்டுக்கான மென்பொருள் அபிவிருத்தியின் கீழ் 7.2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இவ்வருடம் அந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
II.	நிறுவனத்தில் பராமரிக்கப்படும் இணையத்தளம் மூலம் பொதுமக்கள் பாராட்டுகளை அல்லது முறைப்பாடுகளை குறிப்பிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.	மேற்படி அவதானிப்புகள் இந்த அதிகாரசபைக்கு ஏற்புடையதல்ல.
III.	2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிருவாக ஏற்பாடுகளின் படி உரிய வகையில் தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டம் தயாரிக்கப்படவில்லை.	அந்த நேரத்தில் நிலவும் கோவிட் 19 தொற்றுநோய் சூழ்நிலையும், நிறுவனத்தின் பதவியணி 18 பேர் மட்டுமாவதாலும் அலுவலகப் பணிகள் முடங்கியதன் காரணமாக, அலுவலர்களை பயிற்சி நடவடிக்கைகளுக்கு வழிநடத்துவதற்கான சாத்தியம்

		இல்லாததால், அத்தகைய திட்டத்தை தயாரிக்கப்படவில்லை
IV.	தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டம் மூலம் பதிவியணியில் 50% இற்கு மேற்பட்ட எண்ணிக்கையினறுக்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வாய்ப்புகள் சான்றுப்படுத்தப்படவில்லை. ஒட்டுமொத்த பதவியனறும் அடங்கலாக செயலாற்றுகை உடன்படிக்கை தயாரித்து உடன்படிக்கை மேற்கொள்ளப்படவில்லை.	மனிதவள திட்டம் தயாரிக்கப்படாமை காரணமாக இந்த அவதானிப்பு ஏற்புடையதாகாது.
V.	மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதற்கும், ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நிறுவனத்தில் சிரேஷ்ட அலுவலர் ஒருவரை பெயரிடப்பட வில்லை.	மனிதவள திட்டம் தயாரிக்கப்படாமை காரணமாக இந்த அவதானிப்பு ஏற்புடையதாகாது.
VI.	நிறுவனம் தமது விடயவெல்லைக்கமைவாக நிலைபேண்தகு நோக்கங்களை அடையாளம் காணப்படவில்லை.	ஒரு நீதித்துறை செயல்முறை இவ்வதிகார சபையால் மேற்கொள்வதுடன், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணுதல் அல்லது நடைமுறைப்படுத்தல் இதனால் மேற்கொள்ளப்படவில்லை

VII.	அடையாளம் காணப்பட்ட நிலைப்பேண்தகு இலக்குகளை அடைந்துக்கொள்வதனை அளவிட செயல்திறன் இலக்குகளை விதிக்கப்படவில்லை	ஒரு நீதித்துறை செயல்முறை இவ்வதிகார சபையால் மேற்கொள்வதுடன், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணுதல் அல்லது நடைமுறைப்படுத்தல் இதனால் மேற்கொள்ளப்படவில்லை
	அடையாளம் காணப்பட்ட நிலைப்பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான சுட்டிகளை விதிக்கப்படவில்லை	ஒரு நீதித்துறை செயல்முறை இவ்வதிகார சபையால் மேற்கொள்வதுடன், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணுதல் அல்லது நடைமுறைப்படுத்தல் இதனால் மேற்கொள்ளப்படவில்லை
VIII.	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% இற்கும் பார்க்க குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	மேற்படி விடயங்கள் காரணமாக அவதானிப்புகள் ஏற்புடையதாகாது.
IX.	கணக்காய்வாளர்அதிபதி அறிக்கையில் பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை.	அவதானிப்புகளுடன் இணங்கப்படவில்லை. கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

X.	2020.08.28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 பந்தி பிரகாரம், நிறுவனத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைப்பொறுப்புகள் தெளிவாகும் வகையில், அதன் முன்னேற்றம் அளவிட முடியுமான 03 செயலாற்றுகை சுட்டிகளை அடையாளம் காணப்படவில்லை	அவதானிப்புகள் இந்த அதிகார சபைக்கு ஏற்புடையதாகாது.
XI.	அனைத்து அலுவலர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான கூற்றுகளை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	வருடாந்தம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் முன்வைக்கும் மட்டத்திலான பதவிநிலை அலுவலர்கள் இவ்வதிகார சபையில் இல்லை.
XII.	அதிகபட்ச பணிக்காலம் முடிவடைந்த அலுவலர்களை முறையாக இடமாற்றம் செய்யப்படவில்லை.	இந்த அதிகரைசபை ஒரு குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதால், இந்த அவதானிப்புகள் ஏற்புடையதாகாது.